# “PLEDGE ON NATIONAL INTEGRITY AND COMMUNAL HARMONY” 18thAUG 2023

---

The pledge program organized by the Tamil Nadu government to promote national integrity and communal harmony was a great success. The program brought people from different backgrounds together and encouraged them to take a pledge to uphold the values of national integration and communal harmony. Such initiatives are essential to promote social harmony and foster a culture of unity and brotherhood.





**தொழில் நுட்பக் கல்வி துறை**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| தொழில்நுட்பக் கல்வி இயக்குநர்,<br>தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,<br>சென்னை – 600 025. | முதல்வர்கள்,<br>அரசு, அரசு நிதி உதவி பெறும் மற்றும் சுயநிதி பொறியியற் கல்லூரிகள் / பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் சிறப்புப் பயிலகங்கள். |

**கடித எண்: 31686/ஓய்2/சிடிசி/2023, நாள்: 16.08.2023**

ஐயா/அம்மையீர்,

| | |
|---|---|
| பொருள்: | தொழில் நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை – சத்பவனா திவாஸ் உறுதிமொழி – 20.08.2023 அன்று விடுமுறை என்பதால் 18.08.2023 அன்று முற்பகல் 11.00 மணியளவில் உறுதிமொழி ஏற்றல் – தொடர்பாக. |
| பார்வை : | அரசு கடித எண்: e-1556719/Genl-I/2023-2, நாள்: 11.08.2023, Public (General-I) Department, Secretariat, Chennai- 9. |

------

"சத்பவனா திவாஸ்" (நல்லிணக்க நாள்) ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 20-ம் நாள் அனுசரிக்கப்பட்டு வருகிறது. இவ்வாண்டு 20.08.2023 (ஞாயிற்றுக்கிழமை) அன்று விடுமுறை நாள் என்பதால், **18.08.2023 (வெள்ளிக்கிழமை)** அன்று "சத்பவனா திவாஸ்" (நல்லிணக்க நாள்) உறுதிமொழி அனுசரிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பார்வையில் காணும் அரசுக் கடிதத்தில் தெரிவித்துள்ள வழிமுறைகளின்படி உரிய முறையில் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, மேற்படி கடிதம் தங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. மேலும், 18.08.2023 (வெள்ளிக்கிழமை) அன்று முற்பகல் 11.00 மணியளவில் தங்கள் கல்லூரியில் உள்ள பணியாளர்கள் முன்னிலையில் **"சத்பவனா திவாஸ்" "நல்லிணக்க நாள்"** உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்படி அனைத்து கல்லூரி முதல்வர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். உறுதிமொழி நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இணைப்பு: உறுதிமொழியின் நகல்

16/8/2023

தொழில் நுட்பக் கல்வி இயக்குநருக்காக

16/08/23

**நல்லிணக்க நாள் உறுதிமொழி**

நான் சாதி, இன, வட்டார, மத அல்லது மொழி பாகுபாடு எதுவுமின்றி, இந்தியாவின் அனைத்து மக்களின் உணர்வுபூர்வ ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் பாடுபடுவேன் என்று உளமார உறுதிமொழி எடுத்துக்கொள்கிறேன். மேலும், எங்களுக்கிடையேயான அனைத்து வேறுபாடுகளையும், வன்முறையில் ஈடுபடாமல், பேச்சுவார்த்தைகள் மூலமாகவும் அரசியலமைப்புச் சட்ட வழிமுறைகளைப் பின்பற்றியும் தீர்த்துக் கொள்வேன் என்றும் இதனால் உறுதி அளிக்கிறேன்.

## நல்லிணக்க நாள் உறுதிமொழி

நான் சாதி, இன, வட்டார, மத அல்லது மொழி பாகுபாடு எதுவுமின்றி, இந்தியாவின் அனைத்து மக்களின் உணர்வுபூர்வ ஒற்றுமைக்கும் நல்லிணக்கத்திற்கும் பாடுபடுவேன் என்று உளமார உறுதிமொழி எடுத்துக்கொள்கிறேன். மேலும், எங்களுக்கிடையேயான அனைத்து வேறுபாடுகளையும், வன்முறையில் ஈடுபடாமல், பேச்சுவார்த்தைகள் மூலமாகவும் அரசியலமைப்புச் சட்ட வழிமுறைகளைப் பின்பற்றியும் தீர்த்துக் கொள்வேன் என்றும் இதனால் உறுதி அளிக்கிறேன்.

## SADBHAVANA DAY PLEDGE

I take this solemn pledge that I will work for the emotional oneness and harmony of all the people of India regardless of caste, region, religion or language. I further pledge that I shall resolve all differences among us through dialogue and constitutional means without resorting to violence.